# குணசாலியான ஸ்திரீ



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# எனவே, இப்பொழுது ஒரு நல்ல ஸ்திரீ ஒரு மனிதனின் கிரீடத்தில் ஒரு இரத்தினம் போலிருக்கிறாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## <u>நீதிமொழிகள் 12:4</u>

**குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 59-0419A – **என் சுய சரிதை**

---

88 **எனவே, இப்பொழுது ஒரு நல்ல ஸ்திரீ ஒரு மனிதனின் கிரீடத்தில் ஒரு இரத்தினம் போலிருக்கிறாள். அவள் கௌரவிக்கப்பட வேண்டும்.** அவள்...

என் தாயார் ஒரு ஸ்திரீயாயிருக்கிறாள். என் மனைவி ஒரு ஸ்திரீயாயிருக்கிறாள். அவர்கள் அழகானவர்கள். நான் உயர்வாக மதிக்கிற ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ சகோதரிகளை உடையவனாய் இருக்கிறேன். தேவன் அவர்களை என்னவாக உண்டாக்கினாரோ, அதாவது ஒரு தாயின் தன்மையாயும், ஒரு அருமையான ராணியாயும் உண்டாக்கினதை அவர்கள்

மதிக்கமுடிந்தால் நலமாயிருக்குமே! அதெல்லாம் நல்லதுதான்.

**தேவன் ஒரு மனிதனுக்கு கொடுக்ககூடிய மேலான காரியங்களில் அவள் ஒன்றாய் இருக்கிறாள். ஒரு மனைவி இரட்சிப்புக்கு அடுத்தப்படியாக, ஒரு மனைவியே மேலான காரியமாக இருக்கிறாள்.**

அவள் ஒரு நல்ல மனைவியாக இருந்தால் நலமாயிருக்கும். ஆனால் அவள் அப்படியாய் இல்லையென்றால், சாலமோன், "ஒரு நல்ல ஸ்திரீயானவள் ஒரு மனிதனுடைய கிரீடத்திலுள்ள ஒரு இரத்தினமாய் இருக்கிறாள். ஆனால் ஒரு துர்நடத்தையுள்ள ஒருவளோ அல்லது நல்லவளாயிராத ஒருவளோ அவனுடைய இரத்தத்தில் தண்ணீராய் இருக்கிறாள்" என்றான். அது உண்மையே. அது சம்பவிக்கக்கூடிய மோசமான காரியமாய் இருக்கிறது.

எனவே ஒரு நல்ல ஸ்திரீயானவள்... **நீங்கள் நல்ல மனைவியைப்**

**பெற்றிருந்தால், சகோதரனே, நீ உயர்வான மரியாதையை அவளுக்கு செலுத்தத்தான் வேண்டும். அது உண்மையே நீங்கள் அதை செய்தாக வேண்டும்.**

ஒரு உண்மையான ஸ்திரீ, பிள்ளைகளே, நீங்கள் ஒரு உண்மையான தாயாரை, வீட்டிலேயே தரித்திருக்கிறவளைப் பெற்றிருந்தால், அவள் உங்களைக் குறித்து அக்கறை எடுக்க முயற்சிப்பவளாயிருந்தால், உங்களுடைய துணிகளை சுத்தமாக வைத்து, உங்களை பள்ளிக்கு அனுப்பி, இயேசுவைக் குறித்து உபதேசிப்பவளாய் இருந்தால் அந்த இனிமையான வயதான தாயாரை உன்னிடம் உள்ள எல்லாவற்றோடும் கனப்படுத்த வேண்டும். அந்த ஸ்திரீக்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஆம், ஐயா, ஏனென்றால் அவள் ஒரு உண்மையான தாயாக இருக்கிறாள்.

89 கென்டகி மலைகளிலுள்ள எழுத்தறிவின்மையைக் குறித்து அவர்கள்

பேசுகிறார்கள். நீங்கள் அதை இங்கே இந்த ஒட்டுப் போட்ட காரியத்தில் காண்கிறீர்கள்.

அந்த வயதான தாய்மார்களில் சிலரால் இங்கே ஹாலிவுட்டுக்கு வந்து இந்த நவீன தாய்மார்களுக்கு உங்களுடைய பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று போதிக்க முடியும்.

அவளுடைய பிள்ளை ஒரு இரவு தலைமுடி கலைந்து, குளிப்பு கால்சட்டை இவைகளோடு வரட்டும். நீங்கள் அதை என்னவென்று அழைப்பீர்கள். அவர்கள் அவர்களுடைய முகத்தில் பூசிக்கொள்ளும் அழகு சாதனங்கள் அவளுடைய ஆடையெல்லாம் ஒருபக்கமாக கசக்கப்பட்டதாய், இரவு முழுவதும் வெளியே இருந்து குடித்துவிட்டு ஓர் இரவு அவள் வந்தால், சகோதரனே, அவளை கனமான மர உச்சியின் கிளைகளில் ஒன்றை ஒடித்தெடுத்து அடித்தால் அதற்குப்

பின்னர் அவள் ஒருபோதும் வெளியே போகவேமாட்டாள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன். அவள் அதைச் செய்வாள். அவ்விதமான எண்ணம் உங்களுக்கு சற்று இருந்தால் கூட உங்களுக்கு இங்கே ஒரு மேலான ஹாலிவுட்டும், இது ஒரு மேலான தேசமுமாயிருக்கும். அது சரியே. அது உண்மையே. "நவீனமாக இருக்க சற்றே முயற்சிப்பது" என்னவெனில், அது— அதுவே பிசாசின் தந்திரங்களில் ஒன்றாக இருக்கிறது.

59-0419A — **என் சுய சரிதை**

Rev. William Marrion Branham



# தேவன் ஒரு மனிதனுக்கு ஒரு பெண்ணைக் காட்டிலும் சிறந்த ஒன்றைக் கொடுப்பாரானால், அவர் செய்திருப்பார். ஆனால் அவர் ஒரு பெண்ணை கொடுத்தார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## நீதிமொழிகள் 12:4

# குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.





இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 54-12-12 அவர் தமது பேரிலே தானே ஆணையிட்டார்

---

124. இங்கே நிறைய பெண்கள் உள்ளனர், பெண்ணினம் என்பது மிகவும் அற்புதமான காரியம் ஆகும். **தேவன் ஒரு மனிதனுக்கு ஒரு பெண்ணைக் காட்டிலும் சிறந்த ஒன்றைக் கொடுப்பாரானால், அவர் செய்திருப்பார். ஆனால் அவர் ஒரு பெண்ணை கொடுத்தார்.**

125. ஆனால் இதுவோ ஒரு பெண்ணின் உலகம் ஆகும். அவள் தான் முழு காரியத்தையும் நடத்திக்கொண்டிருக்கிறாள், இங்கே உள்ளே வீட்டு தாய்மார்களாகிய உங்களைக் குறித்து அல்ல; உலகத்தில் உள்ளவர்களைக்

குறித்து தான் கூற விழைகிறேன். அங்கே உள்ள ஹாலிவுட்டில் ஆடைகளை களைந்து கொண்டே நடனம் ஆடுகின்ற ஒரு இளம்பெண் தன் தலை முடியை ஒரு விதமாக வெட்ட ஆரம்பிப்பாளானால், எல்லா சிறு பெண்களுமே தங்கள் தலை முடியை அதே விதமாக வெட்ட ஆரம்பிப்பதை கவனியுங்கள். அல்லது ஹாலிவுட் பெண் தன் ஆடையில் ஒரு வடிவை, பாணியை அமைக்க ஆரம்பித்தால், எல்லா சிறு பெண்களும் அதே விதமாக செய்வதை கவனியுங்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்கள் என்று கூறுக்கொள்கின்றனர். அது சரியே. இது பெண்களின் உலகம் ஆகும்.

126. நீங்கள் கவனியுங்கள், அவர்கள் ஒரு தேவ தூதனின் படத்தை வரையும் போது அதை ஒரு பெண்ணைப் போல சித்தரிக்கின்றனர். ஒரு பெண் தேவதூதன் என்கின்ற ஒரு காரியம் இல்லவே இல்லை.

அதை வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலாகிலும் எனக்கு காண்பியுங்கள். ஒவ்வொரு தேவதூதனும் ஆணாக இருக்கின்றான், தூதன் ஒரு பெண் அல்ல. பெண் தூதர்கள், மரியாள் தாய்கள், அதைப் போன்ற காரியங்கள் எல்லாமே, அப்படிப்பட்ட ஒரு காரியமானது இல்லவே இல்லை. ஒரு தேவ தூதன் பெண் என்று வேதாகமத்தில் எங்கேயாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம். அது எப்போதுமே, "அவன்" என்று தான் உள்ளது. மிகாவேல்! காபிரியேல்! "தூதன் தன் உருவின பட்டயத்தை பிடித்திருந்தான்." அது எப்போதுமே "அவன், அவன், அவன், அவன்" என்று தான் உள்ளது. அது சரியே.

127. பெண் ஆணுக்காக உண்டாக்கப் பட்டாள், மனிதன் பெண்களுக்காக உண்டாக்கப்படவில்லை. நிச்சயமாக. அவர்கள் எப்படியாக, எப்படி அவர்கள் ...

128. ஏதேன் தோட்டத்தில் தன்னுடைய கருவியாக பிசாசு பெண்ணை எடுத்துக் கொண்டான். அவன் இன்னுமாக அவளை தன் கருவியாக உபயோகித்துக்கொண் டிருக்கிறான். அது சரியே.

129. மனமாற்றம் அடைந்தவர்களை அல்ல, மனமாற்றம் அடைந்தவர்களை அல்ல, கிறிஸ்தவளாக இல்லாதிருக்கின்ற பெண்ணையே, ஒரு நல்ல பெண் எப்படிப்பட்டவளாக இருக்கின்றாள் என்றால், ஒரு மனிதன் இரட்சிப்புக்கு அடுத்ததாக கண்டடைகின்ற ஒன்றாக இருக்கின்றாள். ஆனால் நல்ல பெண்ணாக இல்லாதிருக்கிற ஒருவள்... அதற்கு வெளியே அவன் கண்டெடுக்கின்றவள். அது சரியே.

130. **ஒரு நல்ல பெண் மனிதனின் கிரீடத்தில் இருக்கும் இரத்தினமாக இருக்கின்றாள், ஆனால் அநீதியுள்ள ஒரு பெண்ணோ அவன் இரத்தத்தில் தண்ணீராக இருக்கின்றாள். அவனுடைய இரத்தம் தான்**

ஜீவனாகும். தன் இரத்தத்தில் தண்ணீர் ஒருவனுக்கு இருந்தால் எப்படியிருக்கும். அது அவனைக் கொன்று போடும்.



# ஆனால் நீதியுள்ளவளே, இரட்சிப்புக்கு அடுத்தபடியாக அவன் பெறக்கூடிய மிகவும் நன்மையான ஒன்று



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

# நீதிமொழிகள் 12:4

## குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-07-07 **யேகோவா யீரே #3**

---

6. என் மனைவியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தப் போகின்றேன். அவள் உலகிலேயே மிகுந்த பயங்காளி. அவள் இன்றிரவு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். தேனே, இதற்கு நீ என்னுடன் சம்மதிப்பாய் என்று எண்ணுகிறேன். என் மனைவியை எழுந்து நிற்கும்படி கூறப் போகிறேன். உலகிலேயே அவள் எனக்கு மிகவும் இனிய பெண்மணி (சபையோர் கை கொட்டுகின்றனர் -ஆசி).

என் மகள், என் மூத்த மகள் ரெபேக்காள். தேனே, உன் தோல் சூரிய

வெப்பத்தினால் கறுத்துள்ளதை அறிகிறேன் (Sunburned) இருப்பினும் நீ எழுந்து நிற்க வேண்டுமென்று விரும்புகிறேன். சரி, ரெபேக்காள். அது என் மகள் ரெபேக்காள் (சபையோர் கைகொட்டுகின்றனர் - ஆசி). நன்றி. நன்றி.

எத்தனை பேருக்கு சகோ. ஜூவல் ரோஸை தெரியும், ஒரு இரவு கூட்டம் தொடங்கின பிறகு, அவர் என் மனைவியை நான் இருந்த மேடைக்கு அழைத்தார். அவள் மயக்கமுற்று விழுந்து விடுவாள் போலிருந்தது, அவள் அவரை எங்கு கண்டாலும் பதுங்கி சென்று விடுவாள். அவர் இருக்கும் இடத்துக்கே வரமாட்டாள். அவர் எங்கே அவளை மறுபடியும் மேடைக்கு அழைப்பாரோ என்று அவளுக்கு பயம்.

நான் அவளிடம், "என்றாகிலும் ஒரு இரவு நீ எழுந்து நின்று எங்களுக்கு சில

வார்த்தைகள் உரைக்கும்படி கூறப் போகிறேன்''. என்றேன்.

அவள், ''ஒரு வாளி தண்ணீர் ஆயத்தமாக வைத்திருங்கள். நான் மூர்ச்சையடைந்துவிடுவேன்'' என்றாள்.

**என் மனைவி எனக்கு மிகவும் அருமையானவள், பிரன்ஹாம் குடும்பத்துக்கு ஏதாகிலும் நன்மதிப்பு கொடுக்கப்பட வேண்டுமானால், அது அவளுக்கே சேர வேண்டும். அவள் தான் எனக்கும் பொது ஜனத்துக்கும் இடையே இருந்தவள். நன்மையாக செய்யப்பட்ட அனைத்தும் அவளே செய்ததாக கருதப்பட வேண்டும்.**

7. இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும் மணம் புரியும் போது, நானும் என் மனைவியும் ஒருமித்து கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக மகிழ்ச்சியான மணவாழ்க்கையை நடத்தி

வருவது போன்று, அவனுக்கும் ஒரு நல்ல மனைவி கிடைத்து இருவரும் சந்தோஷமாயிருப்பார்களென்று நம்புகிறேன்.

" மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்'' என்று சாலொமோன் கூறியுள்ளான் (நீதி. 18:22). **“குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு கிரீடமாயிருக்கிறாள். அநீதியுள்ளவளோ அவனுடைய இரத்தத்தில் தண்ணீராக இருக்கிறாள்.” அவனுடைய இரத்த ஓட்டமே அவனுடைய ஜீவன். எனவே அநீதியுள்ளவள் அவன் பெற்றுக் கொள்ளக் கூடிய மோசமான ஒன்று. ஆனால் நீதியுள்ளவளே, இரட்சிப்புக்கு அடுத்த படியாக அவன் பெறக்கூடிய மிகவும் நன்மையான ஒன்று. தேவன் மனிதனுக்கு மனைவியை விட நன்மையான ஒன்றைக் கொடுக்க முடிந்திருந்தால் கொடுத் திருப்பார். ஏனெனில் தேவன் தமது**

**பிள்ளைகளுக்கு நன்மையானவைகளையே அருளுகிறார். அவர் அவனுக்கு மனைவியைத் தந்திருக்கிறார். அதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.**

பெண்களை இப்படி காணும் போது... அன்றிரவு அவர்களைக் கடிந்து கொள்ள நேர்ந்தது. இந்த பெந்தெகொஸ்தே பெண்கள் உடுத்தும் விதத்தைக் குறித்தும், தலைமயிர் அலங்காரம் செய்து கொள்வதைக் குறித்தும் ஒரு வசனம்உண்டு. நீங்களோ, ''அதனால் ஒரு வித்தியாசமுமில்லை'' என்கிறீர்கள். நிச்சயமாக உண்டு!.

8. உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இங்கு சகோ. ஹாரல், மிஷனரி இருக்கிறார்.

தென்ஆப்பிரிக்காவிலுள்ள டர்பனில் பெண்கள், அவர்கள் உலகிற்கு வந்த வண்ணமாக, நிர்வாணிகளாக அமர்ந்திருந்திருந்தனர். தைக்கப்பட்ட ஒரு

ஆடையும் கிடையாது - நான்கு அல்லது ஆறு அங்குலமுள்ள துணி மாத்திரமே அவர்களுக்கு முன்னால் இருந்தது. நிர்வாணமான அந்த நிலையில் அவர்கள் அங்கிருந்தனர். இந்த மகத்தான அற்புதங்கள் மேடையின் மேல் நிகழ்ந்த பிறகு அவர்கள் எழுந்து நின்றனர். அந்த கூட்டத்தில் ஒரே நேரத்தில் பத்தாயிரம் முகம்மதியர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர், இந்த பெண்களும் ஆண்களுடன் எழுந்து நின்று கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

சகோ. பாஸ்வர்த் என்னிடம், "சகோ, பிரன்ஹாம், நீங்கள் மறுபடியும் அந்த அழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். சரீர சுகம் பெற்றதன் அடையாளமாக அவர்கள் எழுந்து நிற்கின்றனர் போலும்'' என்றார்.

9. நான் பதினைந்து வெவ்வேறு மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டவ

னாய் இதை கூறினேன். அது எவ்வளவு நேரம் எடுக்குமென்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் சொன்னது என்னவென்று குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் மொழி பெயர்த்து முடிக்கும் போது.... நீங்கள், ''பாவிகளை இரட்சிக்க தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்து வந்தார்“ என்று கூறினால், ஒரு மொழி பெயர்ப்பாளர், ”ப்ளூ, ப்ளூ, ப்ளூ, ப்ளூ'' என்பார். மற்றொருவர் ''நிக், நிக், நிக், நிக், என்பார் அதற்கு ''தேவகுமாரன் இயேசு கிறிஸ்து'' என்று அவரவர் மொழிகளில் அர்த்தம்.

ஜனங்கள் அந்நிய பாஷைகளில் பேசினதை நான் கேட்டதுண்டு. அப்பொழு தெல்லாம், ''அது சரியாயிருக்க முடியாது'' என்று நினைத்ததுண்டு. ஆனால் வேதமோ, “அர்த்தமில்லாமல் ஒரு சத்தமும் கிடையாது'' என்கிறது. அப்படி ஒரு சத்தமும் இல்லை. அவர்களில் சிலர் குருவிகளைப் போல் 'க்ளக்' என்றும் சிலர்

பூச்சிகளைப் போல் 'ட்வீட்' என்றும் சத்தமிடுவதை நான் கேட்டேன். ஆனால் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு அர்த்தமுண்டு - ஒவ்வொரு சத்தத்துக்கும் அர்த்தம் இருக்குமானால்.

10. மறுபடியுமாக நான் பேசி, மற்றவர்கள் மொழி பெயர்க்க வேண்டிய தருணம் வந்து போது, நான், ''அது சரீர சுகம் அல்ல, நீங்கள் தேவனுடைய குமாரனை விசுவாசித்து, கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, செல்வதற்கு பரலோகம் ஒன்றுண்டு என்று விசுவாசிப்போர் உங்கள் விக்கிரகங்களை தரையில் போட்டு உடையுங்கள்'' என்று கூறினேன். அவர்கள் கீழே போட்டு உடைத்தனர். நான், ''நீங்கள் இருக்கும் இடத்திலேயே அந்த தேவனிடம் உங்கள் கைகளையுயர்த்தி அவருக்கு துதியை செலுத்துங்கள், அவர் உங்களுக்கு

பரிசுத்த ஆவியைத் தந்தருளுவார்" என்றேன்.

அவர்கள் தரையில் நின்று கொண் டிருந்தபோது, பெண்கள் நிர்வாணமாய் இருப்பதைக் கண்டேன். கிறிஸ்து அவர்களைத் தொட்ட மாத்திரத்தில், அவர்கள் கைகளை மடக்கி மூடிக்கொண்டு அங்கிருந்து நடந்து சென்றுவிட்டனர். அடுத்த முறை அவர்களைக் கண்டபோது, அவர்கள் உடை உடுத்தியிருந்தனர்.

கிறிஸ்து ஒரு அஞ்ஞானிக்கு, அவள் நிர்வாணமாயுள்ளது தவறென்று உணர்த்த முடியுமானால், தங்களைக் கிறிஸ்தவர்க ளென்று அழைத்துக் கொள்ளும் ஸ்திரீகள் ஆண்டுதோறும் அதிகமாக உடைகளைக் களைவதென்பது எனக்கு விளங்கவே யில்லை. எங்கோ ஏதோ தவறுள்ளது.

அங்கு முழுக்க முழுக்க ஒரு அஞ்ஞானி, தான் பிறந்த ரூபத்தில்

நின்றுகொண்டு, அவள் நிர்வாணமாயிருப்பதை அறியாமலே இருக்கிறாள். ஆனால் கிறிஸ்து அவளுக்கு முன்னால் வரட்டும். அவள் நிர்வாணியாயிருப்பதை உணர்ந்து, அவளால் கூடுமான வரையில் தன்னை தன் முடக்கின கரங்களால் மூடிக்கொள்ள முயன்று, அவ்விடம் விட்டு நடந்து சென்று விடுகிறாள். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து அவளைக் காணும்போது, அவள் உடுத்திக் கொண்டிருக்கிறாள்.

எங்கோ ஏதோ தவறுள்ளது, அந்த தவறு கிறிஸ்துவினிடமல்ல என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஓ, வார்த்தை பிழையற்றது என்று நான் எண்ணுகிறேன்.



நீ ஒருக்கால் பழைமை நாகரீகமுடையவளாய் இருக்கலாம். ஆனால் இந்த செக்ஸ் ராணிகளிடம் இல்லாத ஒன்று உன்னிடம் உள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-1110M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்

139. சகோதரியே, ஒரு நிமிடம் ஒன்றை உன்னிடம் கூற விரும்புகிறேன்.

**நீ ஒருக்கால் பழைமை நாகரீகமுடையவளாய் இருக்கலாம். ஆனால் இந்த செக்ஸ் ராணிகளிடம் இல்லாத ஒன்று உன்னிடம் உள்ளது. அவள் பெற்றுக் கொள்ளமுடியாத ஒன்றை நீ பெற்றிருக்கிறாய்.**

நீ உடை உடுத்துவதில் பழமை நாகரீகமுடையவளாய் இருக்கலாம். ஆனால் நீ கனமுள்ள சீமாட்டியைப் போல் உடை உடுத்தியிருக்கிறாய்.

அவர்கள், "அந்த உருளும் பரிசுத்த வாட்டியைப்பார்" என்று உன்னைப் பார்த்து ஏளனம் செய்யலாம். கவலைப்படாதே.

**முழு உலகமே அந்த செக்ஸ் ராணியைப் பார்த்தாலும், இந்த உருளும் பரிசுத்தவாட்டி பெற்றுள்ள ஒன்றை அவள் பெற்றிருக்கவில்லை.** அவள் அதை ஒருக்காலும் பெறமுடியாது. அவள் நித்திய காலமாக இழக்கப்பட்டவள். அவள் விமோசனமற்றவள். பாருங்கள்?

உங்களுக்கு ஒழுக்கம் உண்டு, உங்களுக்கு நற்குணம் உண்டு. அவளிடத்தில் ஒன்றுமில்லை. இழக்கப்பட்ட ஆத்துமாக்களை நரகத்தில் சிக்க வைக்கும் கண்ணி மாத்திரமே அவளிடம் உள்ளது. குருடர் அதற்குள் நடந்து செல்கின்றனர். உங்களிடம் ஒன்றுண்டு.

140. உங்கள் பெயர்கள் ஸ்தாபன புத்தகத்திலும் கூட இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்கள் நீதியுள்ள வாழ்க்கையே தேவனுடைய கோபாக்கினை பூமியின் மேல் இன்று விழாதபடி நிறுத்தி வருகிறது. உலகம் அதை நம்பாது.

உருளும் பரிசுத்தவாட்டிகள் என்று அழைக்கப்படும் ஸ்திரீகளே, தேசத்தின் பாவங்களுக்காக இரவும் பகலும் தேவனிடம் கதறி அழுவதைத் தவிர வேறொன்றையும் அறியாத சிறிய மனிதர்களே, நீங்கள் தான் தேவனுடைய கோபாக்கினையை நிறுத்தி வைத்திருக்கலாம், ”நான் பத்து பேரைக் கண்டால், அதை அழிக்கமாட்டேன். பத்து பேரைக் கண்டால். “சோதோமின் நாட்களில் நடந்தது போலவே நடக்கும்”.

நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? ''நான் பத்து மெதோடிஸ்டுகளைக் கண்டால், நான் பத்து பாப்டிஸ்டுகளைக் கண்டால், நான் பத்து பெந்தெகொஸ்தேயினரைக் கண்டால், நான் பத்து விளையாட்டு வீரர்களைக் கண்டால், நான் பத்து செனட் உறுப்பினர்களை (Senators) கண்டால்'' என்றல்ல; ஆனால் ''நான் பத்து நீதிமான்களைக் கண்டால்!''



**ஒரு நல்ல மனிதன் ஒரு கெட்ட ஸ்திரீயை விவாகம் செய்தால் அவள் நல்லவளாக மாறலாம். அல்லது அந்த மனிதன் கெட்டவனாக மாறக்கூடும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-1110E உங்களிலிருக்கிறவர்

11. இந்த அருமை சகோதரனும் அவர் மனைவியும் என் நெருங்கிய நண்பர்கள். அந்த பத்திரிகையை அநேகர் பார்த்திருப் பீர்கள். தேவனால் அனுப்பப்பட்ட அந்த சகோதரன் எவ்வாறு தன் மனைவியை அனுமதித்தார்.

யாரோ ஒருவர் அந்த அம்மாள் ஜாக்குலின் கென்னடியைப் போன்று (முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவர் கென்னடியின் மனைவி - தமிழாக்கி யோன்) இருப்பதாகக் கூறினாராம். அவர்கள் உடனே தன் தலைமயிரை அலங்காரமாகக் கத்தரித்துக் கொண்டு விட்டார்கள். அது என்ன? அத்தகைய மக்களுடன் அவர்கள் எல்லா சமயங் களிலும் தொடர்பு கொண்டு முடிவில்...

**ஒரு நல்ல மனிதன் ஒரு கெட்ட ஸ்திரீயை விவாகம் செய்தால் அவள் நல்லவளாக மாறலாம். அல்லது அந்த மனிதன் கெட்டவனாக மாறக்கூடும். "உன் சகாக்கள் யாரென்று சொல். அப்பொழுது நீ யாரென்று கூறிவிடுவேன்" என்னும் ஒரு பழமொழி உண்டு.** பாருங்கள்?

"ஒரே வித சிறகு கொண்ட பறவைகள் ஒன்றாகவே கூடியிருக்கும். அத்தகையான பளபளப்பான காரியங்களிலிருந்து விலகி யிருங்கள்.

12. அன்றொரு நாள் அரிசோனா - மெக்ஸிகோ வரிசையிலுள்ள மலைத் தொடர்களின் உச்சியில் அமைந்துள்ள ஒரு சுரங்கத்தின் அடியில் சென்றிருந்தேன். சகோ.சாத்மனும் என்னுடனிருந்தார். பார்வைக்குத் தங்கம் போல் உள்ள ஒன்றை அந்த சுரங்கத்தில் தோண்டியெடுத்தேன். அது தங்கம் அல்ல என்று எவ்விதம்

அறிந்தோமென்றால், அது தங்கத்தைக் காட்டிலும் பளபளப்பாயிருந்தது. தங்கம் பளபளப்பாய் இராது; அது மினுக்கும் (glows). பாருங்கள்? எனவே நாங்கள் தோண்டியெடுத்தது 'முட்டாளின் தங்கம்' (Fool's gold) என்றழைக்கப்படும் கனிமப் பொருளாகும். அதை உள்ளடக்கியிருக்கும் பாறையின் விலை மதிப்பும் கூட அதற்கில்லை. அது 'இரும்பு பைரைட்' (Iron pyrite) எனப்படும் கனிமப் பொருள். அமிலமும் தண்ணீரும் போதிய அளவிற்கு அங்கு ஊடுருவிச் செல்லாததனால், அது கடினப்பட்டு தங்கமாக மாறவில்லை யென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் காண்பதற்கு அது தங்கத்தைக் காட்டிலும் பளபளப்பாயுள்ளது. இருப்பினும், தங்கத்திலுள்ள இரசாயனப் பொருட்கள் அதில் இல்லை.

அது போன்றே இன்றைக்கு அநேக பாவனை கிறிஸ்தவர்கள் உள்ளனர். ஹாலிவுட்டைப் போன்று அவர்கள் பளபளப்பாயிருக்கின்றனர். **ஆனால் சபையோ சுவிசேஷத்தைக் கொண்டதாய், தங்கத்தைப் போன்று மினுமினுப்பாயுள்ளது.** பாருங்கள்?



ஸ்திரீயை, அவளுக்குச் சொந்தமான சமையலறையில் வையுங்கள், அப்பொழுது எல்லாம் சரியாகிவிடும். ஆனால் நீங்கள் அவளை அங்கே பொது இடத்தில் பணிபுரிய வைக்கும்போது, அவள் ஒழிந்து போய்விடுகிறாள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-10-06 எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும், பாகம் 3, COD #7

---

776. இப்பொழுது இன்றைக்கு அமெரிக்காவில் உள்ள நம்முடைய ஸ்திரீகளை நோக்கிப் பாருங்கள்.

ஒரு சில நாட்களுக்கு முன்னர் கென்டக்கியிலிருந்து வந்த ஒரு வாலிபன் இங்கே கென்டக்கியில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொழிற்கூடத்தில் எண்ணூறு ஸ்திரீகள் பணிபுரிந்து கொண்டிருந்ததாகக் கூறினான். மேலும் அவன், "அவர்களில் நானூறு பேர் முற்றிலும் தெரு விபச்சாரி களாய், திருமணமான ஸ்திரீகளாய் பிள்ளைகளோடு இருக்கிறார்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்" என்றான்.

ஒரு நபர் தன்னுடைய மனைவியை அங்கிருந்து அழைத்துச் சென்று, ஒரு குழுவினரோடு அவள் வேலை செய்த போதே அவளை கொன்று போட விருந்தான். மற்றொருவன் ஒரு மனிதனைச் சுடச் சென்றான். மற்றொரு வனோ வெட்டிக் கொண்டும் சண்டை யிட்டுக்கொண்டுமிருந்தான். அவ்வாறு செய்யக்கூடாது. அது சரியல்ல.

777. **ஸ்திரீயை, அவளுக்குச் சொந்தமான சமையலறையில் வையுங்கள், அப்பொழுது எல்லாம் சரியாகிவிடும். ஆனால் நீங்கள் அவளை அங்கே பொது இடத்தில் பணிபுரிய வைக்கும்போது, அவள் ஒழிந்து போய்விடுகிறாள்.** முற்றிலும்... நான் அதை கூறவில்லை .

778. அமெரிக்க ஸ்திரீகள் தங்க ளுடைய மூக்குகளை மேலே உயத்தின வாறு அடக்கமின்றி சிரித்து, “அதனால் ஒன்றுமில்லையே” என்று கூறுகிறார்கள்.

மேலும், "நீர் எனக்குக் காண்பியும்" என்கின்றனர். நிச்சயமாகவே, நீங்கள் அதைச் செய்ய வேண்டும், ஏனென்றால் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று வேதம் முன்னுரைத்துள்ளது. எனவே நீங்கள் அதைச் செய்யத்தான் வேண்டும்.

---



நீங்கள் எவ்வளவு தான் நடனமாடி, அந்நிய பாஷை பேசினாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள் உங்கள் கணவருக்கு கீழ்படியாத வரைக்கும், தேவனுடைய சித்தத்துக்கு புறம்பாய் இருக்கிறீர்கள்.

**I don't care how much you dance and speak with tongues, if you don't obey your husband, you're out of the will of God.**

உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 80

Rev. William Marrion Branham:

~~~~~~~~~~ ★~~~~~~~~~~

இந்த உலகத்திலுள்ள எல்லா பெண்களிலுமே ஒரு பெண் தான் எனக்குக் கிடைத்தாள், அதுதான் என்னுடைய மனைவி, தேவன் உலகத்தில் வைத்திருப்பதிலேயே எனக்கு மிகவும் இனிய பெண்ணாக இருப்பவள் அவள் தான். அது உண்மை. அவள் என்னுடையவள், எனக்கு மட்டுமே உரியவள்; நான் அவளுடையவன், நானும் அவளுக்கு மாத்திரமே உரியவன். நான் வாலிபனாக இருக்கும் போது, அவ்வாறே நினைத்தேன்; இப்பொழுது, நான் வயதான மனிதன், நான் இன்னும் அவ்வாறு தான் நினைக்கிறேன்.

~~~~~ ★~~~~~

I got one woman, is all the woman in the world, and that's my wife, sweetest woman that God ever put on earth, for me. That's right. She's mine, and mine alone; and I'm hers, and hers alone. And that: when I was a young man I thought that; now I'm an old man and I still think it.

~~~~~~~~~~ ★~~~~~~~~~~

(64-0412)
~~~~~~~~~~

வாலிப பிள்ளைகளே, நீங்கள் எல்லாரும் அருமையான பிள்ளைகள், நீங்கள் நண்பர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டியது தான், ஆனால் நீங்கள் கொண்டிருக்கும் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கவனியுங்கள். அந்த நண்பன் கிறிஸ்துவைப் பின்பற்றிக் கொண்டிருந்தால், அந்த நண்பனோடு செல்லுங்கள். நீங்களும் கூட கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள். ஆனால் அவன் கிறிஸ்துவைப் பின்பற்றாதவனாகில், அவனோடு சேர்ந்து கொள்ள வேண்டாம்.

Rev William Branham

*செய்தி: என்னைப் பின்பற்றி வா*

# குணசாலியான ஸ்திரீ



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து